

# அருவி

ARUVI

ஏழாவது சிறப்பிதழ்

உலகினைப் புரட்டியோர்
புதுவாழ்வு படைத்திட
எழுதுகோல் இங்கோர்
நெம்புகோல் ஆகட்டும் !

*அறிவியக் கவிஞர் சாலையார்*

கின்னசுப் புத்தகம் தன்னைத் திருத்திச்
சரியாய் எழுதுங்கள் – அதில்
கிடக்கிற சாதனைக் கதைகளை எல்லாம்
புதிதாய் எழுதுங்கள்!
கின்னசுப் புத்தகம் தன்னைத் திருத்தி

சாதனை என்றுள்ள ஒவ்வொன்றும் புரிந்தவன்
தமிழன் தமிழன்தான் – அதைச்
சரியாய்ப் புரிந்தவன்,முதலில் புரிந்தவன்
தமிழன் தமிழன்தான் !
பூதங்கள் அய்ந்தின்இணைவே உலகெனப்
புரிந்தோன் தமிழன்தான் – அதை
முதலில் புரிந்தோன், எழுத்தில் பொறித்தோன்
தமிழன் தமிழன்தான் !
கின்னசுப் புத்தகம் தன்னைத் திருத்தி....

காடோ மேடோ, நல்லவர் வாழும்
இடமே நாடென்றான்-அந்தக்
கணக்கை மாற்றிப் பிணக்கை வளர்த்தால்
அதவே கேடென்றான்!
மாடோ மனையோ அளவாய் இருந்தால்
அதுவெ வாழ்வென்றான்-உயர்
வாழ்வுக்கு இலக்கணம் உயர்வாய் உயர்வாய்
வரைந்தோன் தமிழன் தான்!
கின்னசுப் புத்தகம் தன்னைத் திருத்தி....

மானமும் வீரமும் இணைந்த குருதி
ஓட்டம் மனிதனென- தனி
வகையாய் இலக்கணம் சொல்லிக் கொடுத்த
மறவேன் தமிழன்தான்
வானத்தின் கீழேஒன்றே உலகம்
என்றோன் தமிழன்தான்-அதில்
மற்றவர்களையும் பயிற்றி வளர்த்த
முதல்வோன் தமிழன்தான்!
கின்னசுப் புத்தகம் தன்னைத் திருத்தி....
சரியாய் எழுதுங்கள்!

# அருவி

# ARUVI

No. 425
Taman Sri Mahsan
72100 Bahau
Negeri Sembilan
Malaysia.

Tel : 06-4547415
E-Mail : aru1966@tm.net.my

ஏழாவது சிறப்பிதழ்

ஆசிரியர் குழு :
சீ.அருண்
கணபதி கணேசன்
வே.சுந்தரராசு
ஏ.தேவராசன்

மரபுக்கவிதை பொறுப்பு :
பாநெறிப்பாவலர் டாக்டர் டி.வீ.ஆர்.பி

# *தமிழகப் பொங்கல் வாழி*

முன்னணிக் கவிஞர் **O.P.M.** குத்தூஸ்
யாங்கோன், மியன்மார்

1.

பொங்கல் தோற்றப் புதுமையிலே
பொன்போல் உழைப்பை பேணுவதே
திங்கள் ஒளியாய்த் திகழ்ந்திடவே
தங்கும் தண்ணீர் மழையாலே
தங்கள் பிழைப்பில் தேன்வண்டாய்
சுற்றி சுற்றி உழுதிடுவார்
மங்களம் காணப் பொங்கிடுவார்
மண்ணின் வளத்தை வளர்த்திடுவார்.

2.

கண்ணிய மிக்கப் பொங்கலுமே
கருத்துக் களித்த கண்ணியமே
நுண்ணிய மிக்க உழவுத் தொழில்
நாட்டு வளத்தை பெருக்கிடுமே
மண்ணில் உழுது வாழ்வாரே
மற்ற வர்பின் செல்வோரே
கண்ணின் மணியாய் காண்பவரே
கைத்தொழில் உணவு உண்போரே

3.

தேன்போல் சுவைக்கும் பொங்கிடும்நாள்
தெவிட்டா மொழியே தாய்மொழியாம்
மாண்பு மிகுந்த நாட்டுமொழி
மக்கள் சுவையில் ஊற்றாக
தன்னி னத்தால் தலைமைபூண்டு
தூய பண்பால் சான்றோராம்
அன்பை பகிர்ந்திட் டளவளாவி
அனைத்து மக்கள் இன்புறவே

4.

திங்கள் பொங்கல் சுடரொளியே
திக்கெட் டுமாக தோன்றியதே
மங்கள மணங்கள் காண்பவரே
மனித குலத்தின் ஒற்றுமையை
பங்க மிலாத உரிமையாலே
படைத்த இறைவன் ஓர்மையிலே
சங்கம் அமைத்து துயர்துடைத்து
தளர்ச்சி விட்டே எழுச்சிகொண்டே

5

பிறருக் குதவும் அச்சாணி
போன்றே உயிர்வாழ் பவரேயாம்
பெருமை இல்லா தாள் பணிவு
புகழை விரும்பா வாழ்க்கையிலே
அருமை பொங்க லுக்கிடையே
அடுத்திட் டுதவும் பான்மையிலே
உரிமை காட்டி உயர்ந்தவரே
ஒழுக்க மிக்க பிறவியவர்

6

| | | |
|---|---|---|
| உலகம் | போற்றும் | பண்புடைமை |
| உழவர்க் | குண்டாம் | எந்நாளும் |
| திலகம் | போல | சிறப்புற்று |
| சாத்வீ | கத்தில் | சுடர்கொழுந்தில் |
| நிலங்கள் | காதல் | கொண்டவரே |
| நிறைந்த | போதும் | என்றமனம் |
| வளர்ச்சி | வாய்ப்பு | முழுமையிலே |
| இரந்த | வர்க்கெல் | லாம் ஈவார் |

7

| | | |
|---|---|---|
| அமைதி | அரண்போல் | பொங்கலுமாம் |
| ஆற்றல் | அனைத்தும் | உழவருக்கே |
| ஆத்ம | பக்தி | தக்கவைக்கும் |
| ஆன்றோர் | உதயம் | தந்திட்டார் |
| வித்த | கத்தில் | சத்தியமே |
| முத்தி | ரையாக | பதியவைத்து |
| புத்தி | யோடு | புகழ்பரப்பி |
| புனித | பொங்கல் | விழாவிலேயே |

8

| | | |
|---|---|---|
| கல்லில் | வடிப்பார் | சிலைதானே |
| வில்லில் | வீரம் | காட்டுவதே |
| சொல்லில் | யாவும் | பகவன்தான் |
| தூய | அறிவும் | திருவடிதான் |
| பொல்லா | சேர்க்கை | இல்லாத |
| பூமான் | வாழ்வில் | நாவாலும் |
| எல்லாக் | கருத்தும் | எளிமையிலே |
| இணைந்த | உழைப்பாம் | உடலாலே. |

9

| | | |
|---|---|---|
| நெஞ்சில் | அமைதி | நீண்டுயர |
| நல்ல | நட்பின் | ஊஞ்சலிலே |
| அஞ்சும் | உள்ளம் | கள்ளமிலா |
| கருணை | காட்டும் | ஒளிவிளக்கு |
| கஞ்ச | மில்லா | வாழ்க்கையிலே |
| காட்டும் | நேர்மைப் | பாதையிலே |
| தஞ்சம் | அடைந்து | சக்தியிலே |
| சீர்மிகு | கோட்டை | பொங்கலிலே. |

10

| | | |
|---|---|---|
| ஏழை | தர்மம் | என்றென்றும் |
| இனிமை | நன்மை | ஏற்றமுமே |
| அழியா | அன்பால் | நெஞ்சாலே |
| ஐக்கிய | கோட்டை | கட்டியதே |
| பழியும் | பாவம் | விலகிடவே |
| பகையில் | வெற்றி | பொருந்துதலே |
| வாழீ | பொங்கல் | வாழியவே |
| வாழ்த்து | வாழ்க | என்பதுவே |

11

| | | |
|---|---|---|
| புண்ய | பொங்கல் | பயிர்தழைக்க |
| பொங்கும் | மங்க | ளமேயோங்க |
| கண்கள் | போல | கல்விபெற |
| கொள்கை | பேதம் | கொள்ளாமல் |
| கண்யம் | கற்பும் | காத்திடவே |
| கலையில் | மூழ்கி | குரலுயர்த்தி |
| எண்ணம் | எதுகை | மோனையாக |
| இணைந்த | சீரு | டனாகவுமே |

12

தங்க நிலாவும் சிந்தல்போல்
சீராய் பொங்கல் விழாவதுவே
அங்க மெல்லாம் ஒருமையாலே
அழகில் இயங்கும் கூட்டுறவே
சங்கம் அமைத்த சான்றோர்கள்
தமிழை வளர்த்தார் காப்பியமாய்
பங்க மிலாமல் எங்குமாக
பார்க்கும் விழிகள் பூத்ததன்றோ.



## தமிழரே!

தமிழரே இல்லாத காட்டிலும் தமிழர்!
தம்தனித் தமிழரின் தன்மையைக் காப்பவர்!
தமிழே தங்களை ஈன்றதாய் என்பர்!
தமிழ்தான் உடலெனும் உயிரெனும் சொல்வர்!

தமிழை அமிழ்தெனச் சொல்வது தவறிலை!
தமிழ்தான் அமிழ்தம் என்பதால் தொல்லை!
தமிழைச் சுவைத்துக் கொண்டதன் எல்லை!
சகத்தினில் அச்சுவை அறிவதே இல்லை!

தமிழைப் பழிப்பவனைத் தாய்தடுத் தாலும்!
தரணியில் விடாதே என்றனன் பாரதி!
கமழும் தமிழர் குலமனைத் திற்கும்
கவிஞர் வரைந்தார் துணிவான சேதி!

தமிழர் எவர்க்கும் சளைத்தவர் இல்லை!
தமிழர் என்பவர் பண்பினுக் கெல்லை!
தமிழைத் தாழ்த்திடின் தாங்குவார் இல்லை!
தமிழே எங்களின் வாழ்வுக் கெல்லை!

ரா. ஜானகிராமன்
தமிழ்நாடு.

# எழுதாத காவியம்

(எடுப்பு)

தமிழுக்கு எதிர்காலம் இல்லை - உலகில்
தமிழர்கள் வாழ்க்கையே தொல்லை

(தொகுப்பு)

தமிழர்க்கு எதிர்காலம் ஏது - உலகில்
தமிழே இல்லாத போது

(முடிப்பு)

இனமும் மொழியும் இரு கண்கள் - அவை
இல்லாவிட்டால் வெறும் புண்கள்
இனத்தையும் மொழியையும் மறந்து அவர்
எல்லாப் பொருளையும் துறந்து

சிதறிய மத்தாப்புப் போல - அவர்
திசை மாறும் பறவைகள் போல
உதறிய பருக்கைகளாகி - அவர்
உறைபனி போலவே ஆனார்

உண்ண உணவும் இன்றி - அவர்
ஒதுங்கவும் ஓர் இடமின்றி
எண்ண மனமும் இன்றி - அவர்
எழுதாத காவிய மானார்

முனைவர் தமிழ்ப்பேன்
- சென்னை -
இந்தியா

# அவனே மனிதன்

பொய்யுரைக் காதுபுறம் பேசித் திரியா
மெய்யென எதுவும் மேனியில் கொண்டு
பெய்திடும் மழையின் பொலிவினைக் கொண்டு
நெய்திடும் சோலை நோததியைக் கண்டு

உள்ளம் கறைபடா துறுதியைக் கொண்டு
வெள்ளம் பெருகும் வேர்கள் தனிலே
தெள்ளத் தெளிவாய் தரணியில் வாழும்
வெள்ளை மனமுடன வாழ்வான் எவனோ?

உலகில் உலவும் உயிர்க ளிடத்தில்
அலகில் லாமல் அன்பா யிருந்து
கலகம் அழித்து கவினார் செயல்கள்
நிலையாய் செய்து நெறியுடன் வாழும்

நெறி யுடையோர் நிலவும் புகழில்
வெறி களைந்து விலையா யிருந்து
தறிகெட் டுலவும் தாழ்ந்தோர் நெஞ்சில்
குறியாய் எதுவும் குறைவில் லாமல்

சிறுமைத் தனத்தை சேற்றில் புதைத்து
வெறுமை மதத்தை வாளா லறுத்து
பொறுமை அன்பை பொழிவான் எவனோ
அறிவீர் உலகீர் அவனே மனிதன்.

**கவிஞர் கே.வி ஜனார்த்தனன்**
**காஞ்சி தமிழ் நாடு.**

## காணிக்கை

சாதனைச் சிகரங்கள் ஏறினேன்
என்றாலும் நான் வாழ விரும்புவது
சுமவெளிகளில்தான்!

ஆறுகள் இணையட்டும்
பிறகு ஒப்புக் கொள்கிறேன்....
நான் ஒரு இந்தியன் என்று

தற்கொலை பாறைக்குச் சென்றேன்
ஒரு நிமிடம் நின்று....
இயற்கையை இரசிக்க

சிறகுகள் முறிந்தாலும்
மூச்சிருக்கும் வரை பறப்பேன்....
தேசங்களின் மேலே

எத்தனை கோடி இன்பம் வைத்தாய்
எங்கள் இறைவா....
தீக்குள் விரலை விட்டேன்

ஆண்களுக்கு தாலி கட்டுங்கள்
கிடைத்து விடும்...
பெண் விடுதலை?

மரத்தை வெட்டி
விளம்பரப் பலகைகள்...
மரத்தை வெட்டாதே என்று.
உப்புச் சத்தியாகிரகம்
இன்னும் தொடர்கிறது
அவர்கள் கண்களில் கண்ணீர்...

ஏ... குடிக்காரர்களே
கவிதை படியுங்கள்..
தமிழுக்கு மதுவென்று பேர்



மகா. மதிவாணன்
செய்யாறு

- நன்றி
கணை
தமிழ் நாடு

*வாழ்வும் தாழ்வும் ... !*

கள்ளுக் கடையில்
குடும்பக் கதையை
எண்ணி கதைப்போன் வாழ்வு
என்றும் தொடரும் தாழ்வு.. !

கட்சித் தலைவன்
காலை வருடி
சொக்கும் தொண்டன் வாழ்வு
சோகம் தொடரும் தாழ்வு.. !

குத்து வெட்டில்
குலப்பேர் கெடுத்துக்
கத்தும் குண்டன் வாழ்வு
கறையால் தொடரும் தாழ்வு.. !

விடிய விடிய
வீடியோ பார்த்து
விடியலைத் தேடுவோர் வாழ்வு
வெம்பித் தொடரும் தாழ்வு.. !

ஆண்டவன் பேரில்
ஆடு கோழி வெட்டித்
தாண்டவம் போடுவோர் வாழ்வு
சிதைக்கத் தொடரும் தாழ்வு.. !

தொட்டதற் கெல்லாம்
சாதி பேசி
ஒற்றுமை கெடுப்போர் வாழ்வு
உதைபட்டுத் தொடரும் தாழ்வு.. !

சொந்த இனம் , மொழியைத்
தூற்றி தனது
தொந்தியை நிரப்புவோர் வாழ்வு
துயரம் தொடரும் தாழ்வு ... ?



ம.அ. சந்திரன்
தாசேக் குளுகோர்
மலேசியா

# பழுது வேலிகள்

மறைநிலையில் நாமும்
ஓசேஷாக்கள்தான்

புற இயேசுகள்
கள் மரத்துப் புத்தர்கள்
ஒயின் தோட்டத்து நபிகள்
துப்பாக்கித் தேடும் காந்திகள்
சகலமும் நாம்தான்

மனச்சமுத்திரத்தில்
யுகயுகமாய்
அணுகுண்டு பட்டறைகள்

முதல் மனிதன்
விலாவை நீட்டியதன்
விளைவினால்......

அதுவரையில் இருப்பார்கள்
மாதவிகள்
மடோனாக்கள்
டயானாக்கள்
இன்றைய குகூஷ்புகள்!

நம்மூரிலும்
ஆங்காங்கே .....

ஏ.தேவராஜன்
ஜாசின்
மலேசியா

# முழு நிலவு

வா, நிலவே!
தூக்கத்திலிருந்து எங்களை உசுப்பி எழுப்பு
வா, உனது வலையை
எங்களது தண்ணீரில் வீசு
எங்களை வெளியே இழுத்துப் போடு.
எங்களை எங்களுக்கு வெளியே எடுத்துக் கொட்டு
உறக்கமற்ற வானத்தில்
எங்களைச் சுதந்திரமாக விட்டுவிடு
எங்களால் அதைத் தாங்கிக்கொள்ள முடியாதுதான்
தூக்கத்தில் தோய்ந்து, தோய்ந்து
எங்களது நுரையீரல்கள் வெறும் மூச்சுக் குழாய்களாக
மாறிப் போயிருந்தாலும் போயிருக்கலாம்...

ஆனால்,

எந்தவொரு ஆபத்து வந்த போதிலும் எங்களை எழுப்பு
எங்களைச் சுதந்திரமாக, தனியாக
கடலில் விட்டுவிட்டு –
அளவற்ற கவனிப்புடன்
கடலின் பரப்பு மீது
அலைகளின் மீது
இழுத்துக் கட்டப்பட்ட இறுக்கமான கயிறு போன்ற
தொடுவானத்தின் மீது
ஆறுதலாக முன்னேற,
இரண்டு நரகங்களுக்கிடையில்
உனது கண்ணில் கரைந்துவிட்ட எங்கள் கண்கள்
நம்பிக்கைப் பித்துப் பிடித்த எங்கள் கண்கள்.

---

(ருமேனியாவின் புகழ்பெற்ற கவிஞரான அனா ப்ளாண்டியானா உரைநடை, படைப்பிலக்கியம், மொழியாக்கம், சிறுவருக்கான கதைகள் ஆகியவற்றிலும் சிறந்து விளங்கிறார். ருமேனியாவின் முன்னாள் அதிபர் சிசெஸ்கோவின் ஆட்சியை விமர்சித்ததன் காரணமாக 1988- இல் அவரது நூல்கள் தடைசெய்யப்பட்டு அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். இப்போது ருமேனியாவின் ஆளும் கட்சியை எதிர்த்து நிற்கும் அரசியல் இயக்கமொன்றில் முனைப்பாக பணியாற்றுகிறார். இக்கவிதையின் ஆங்கில மொழியாக்கம் இடம் பெற்றுள்ள சஞ்சிகை:
Index on censorship Vol 21, No. 9.)

**நன்றி: அவ்வப்போது பறித்த அக்கரைப் பூக்கள்!**

– வ. கீதா
எஸ். வி. இராஜதுரை



# எச்சில் பண்டம்

கட்டவிழத் துடிக்கும்
செம்பருத்திப் பூப்போல
சித்திரை மாதத்துக்
கத்திரி வெயிலில்
கருவறை விட்டுக்
களம் குதித்த
சதைப் பிண்டம் நான் !

தொப்புள் கொடி
அறுபட்டவளின்
தாலாட்டைவிட அவள்
தேம்பலும் புலம்பலுமே
என் ஊனும் உயிரும் !

தோளில் புரள்வேன் -
தோரணமாகிக் கழுத்தில்
திரண்ட செல்வமாவேன் -
எல்லாம் கனவாகி
தூரம் எறியும்
எச்சில் பண்டம் நான் !

சந்திரா மனோகரன்,
ஈரோடு, இந்தியா.

வெ.தேவராஜுலு
பினாங்கு,மலேசியா.

# கனவு

தாய் வயிற்றுத் தளிர் பயணம்
வாழ்வுத் தேடலில்
தொலைந்துப்போயின விளக்கும்
ஒளியும்

கனவொளிகளில்
சிரித்திடும் இறைவனின் முகம்
கனவு பூக்களின் மடியில்
உயிர்பெறும் என் உடல்

முட்பாதைகளின் வீதியில்
என் நினைவுகளும்
பெரு மூச்சும்
சோர்வாகும் போதெல்லாம்
தட்டியெழுப்பும் கனவுகள்.

கனவுகளின் மடியில்
பாலருந்தும் சிசுவாய்
என் மனம்
ஓ! பூமியின் பிம்பங்ளே
ஒரேயொரு முத்தம் கொடுக்கின்றேன்
அதை சேர்த்துவிடுங்கள்
இறைவனிடம்

## *வாழ்க கனிமொழி !!*

பாசமதன் தேர்தலிலே கண்ட வெற்றி பிள்ளை யென்பேன்
நேசமுடன் பெற்றெடுத்த செல்வமதை வாழ்த்துகின்றேன்
தேசமதன் செல்வமெலாம் சேர்ந்தெமக்குக் கிடைத்தபோதும்
நேசமகள் ஒருத்தியவள்க் கீடெனக் கொள்ளுவமோ?

நாடுவிட்டு நாடுவந்து நட்டநடுக் காட்டினிலே
வீடுதேடி அலைவனைப்போல் பாசமதைத் தேடுகிறேன்
வீடுநோக்கி வந்து நின்ற தந்தியதைக் கண்டதுமே
மூடுகின்ற விழியிடையில் நீர்நிரம்ப உணருகிறேன்.

பாடுமிந்தக் கவிதையி லே பாசமதை அனுப்புகிறேன்
பாடுகிறேன் வாழ்க நீங்கள் வாழ்கவென்று பாடுகிறேன்
தேடுகிறேன்புதிய செல்வம் போற்றவொரு வார்த்தையினை
நீடுவாழி புதுவரவே! நீடு வாழி! வாழியவே!

தமிழதனின் இனிமையினைத் தமிழினிநீ இனிஅளிப்பாய்
தமிழறிஞன் உன்தகப்பன் தலைநிமிர்ந்து இனிநடப்பார்
சொத்துக்கொரு ஆண்மகவும் அன்புக்கொரு பெண்மகவும்
பெற்றிட்ட தன்துணையின் துணிவோடே நிமிர்ந்திருப்பார்!

வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க!

சேர்மன் கவிஞர் எழிலன்

உலக நினைவலைகளில்

மார்டின் லூதர்கிங்

## எனக்கொரு கனவுண்டு (கருத்துச் சுருக்கம்)

எனக்கொரு கனவுண்டு!
எல்லா குழிகளும் என்றொரு நாள் நிரப்பப்படும் என்று, எல்லா மலைகளும் கீழிறங்கப்படுமென்று, காடான நிலங்களெல்லாம் வளம்பெறும் என்று வளைவுகளும், நெளிவுகளும் நேரிடுமென்று, ஆண்டவனின் அருள் வெளிச்சத்துக்கு வருமென்று,

எல்லோரும் ஒற்றுமையாக வாழும் காலம் வருமென்று,
எனக்கொரு கனவுண்டு!
இது எங்கள் நம்பிக்கை
இந்த நம்பிக்கையுடன் துன்பம் என்ற மலையினை நாம் கடந்துவிடலாம் என்று சிறிய நம்பிக்கை உண்டு.

இந்த நம்பிக்கையுடன் இனத்திடையே உள்ள முரண்பாட்டை நாம் மாற்றி விடலாம் என்றும் சகோதாத்துவம் என்ற அழகான ஓசையை உருவாக்கலாம் என்றும் எனக்கொரு கனவுண்டு!

இந்த நம்பிக்கையுடன் நாம் ஒன்றாக உழைக்க முடியும்
ஒன்றாக பிரார்த்திக்க முடியும் !
ஒன்றாக போராட முடியும்!
ஒன்றாக சிறை செல்ல முடியும்!
என்றோ ஒருநாள் எமது சுதந்திரத்தை அடைவோம்
அதுதான் எங்கள் நம்பிக்கை!

அமெரிக்காவில் நிலவிய கறுப்பினத்தவர்களுக்குக்கெதிரான அடிமைத்தனத்தை ஒழிக்க போராடிய கறுப்பின மதகுரு வரலாற்று புகழ்மிக்க 28.08.1963 'உரிமை கோரல்' ஊர்வலத்தில் பாடியகவிதை இது.1964இல் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற இவர் 04.04.1966ல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

# I have a dream

I have a dreamthat one day
Every valley shall be exalted.
Every hill and mountain
Shall be made low,
The rough places will be made plaine,
And the crooked places,
Will be made straight,
And the glory of the lord,
Shall be revealed,
And all flesh shall see eat together

This is our hop,
With this faith,
We will be able to hew out
of the mountain of despair a stone of hope.
With this faith,
We will be able to transform,
The jangling discords of our nation
Into a beautiful symphony
of brother hood.

With this faith,
We will be able to work together
To pray together,
To struggle together,
To go to jail together,
Knowing that we will be free one day.




1. உலகிய லறிவும் உயர்குண நெறியும்
உணர்ந்தே நடப்பது தமிழினம்.

2. உயர்தனிச் செம்மொழி ஒப்பிலா தொன்மொழி
உலகினில் பெற்றது தமிழினம்

3. இலக்கிய வளமும் இலக்கண வரம்பும்
பண்டே படைத்தது தமிழினம்

4. தன்னிக ரில்லா திருக்குற ளியற்றி
வான்புகழ் எடுத்தது தமிழினம்

5. எட்டுத் தொகையொடு பத்துப்பாட்டும
என்றோ கண்டது தமிழினம்

6. சிலம்பொடு மணியும் சரித்திரம் படைக்குஞ்
சிறப்பினை உடையது தமிழினம்

7. விழுமிய வீரமும் விழுப்புகழ் ஈரமும்
விழியெனக் கொண்டது தமிழினம்

8. நெஞ்சொடு பழகி நஞ்சு கொடுப்பினும்
அஞ்சா துண்பது தமிழினம்

9. உண்ணீர் ஆயினும் மானங் கெடவரின்
மறுத்துயிர் விடுவது தமிழினம்

10. யாதும் ஊராய் யாவரும் உறவாய்
எண்ணி வருவது தமிழினம்

11. கொடுப்பது உயர்வென இரப்ப திழிவெனக்
கருதி வாழ்ந்தது தமிழினம்.

12. உலகினைத் தரினும் பழிசெய நாணும்
பண்பினைப் பெற்றது தமிழினம்

13. புகழினுக் காகப் பொருளொடு உயிரும்
பூரிப்போ டளிப்பது தமிழினம்

14. கடவுளும் போற்ற காதலர் வாழ்வைக்
கடனெனக் கொண்டது தமிழினம்

15. இல்விருந் தோம்பி வருவிருந் தோர்க்கும்
இயல்பினை விண்டது தமிழினம்

16. நாடும் மொழியும் பொருளெனக் கருதி
நல்லுயிர் ஈவது தமிழினம்

17. திரைகடல் ஓடி திரவியம் தேடுந்
தைரியம் மிக்கது தமிழினம்

18. இமய வுச்சியில் தமிழ்க்கொடி நாட்டி
இருநிலம் ஆண்டது தமிழினம்

19. அலைகடல் கடந்து அங்கேயுங் கூட
அரசு செலுத்தியது தமிழினம்

20. தன்னுயிர் போல மண்ணுயிர் யாவும்
நின்னுப் புரப்பது தமிழினம்

21. ஒன்றே குலமும் ஒருவனே தேவனென்
றுலகுக் குரைத்தது தமிழினம்

22. உலகு நிலைபெற பண்புடை யாளரே
காரண மென்றது தமிழினம்

23. காலனை வென்று தன்னுணர் வெய்திப்
பெருவாழ்வு பெற்றது தமிழினம்

24. ஒற்றுமை ஒன்றே ஒருசிறிது மின்றிச்
சிதறிக் கிடப்பது தமிழினம்.

இவண்,
மு.புலவர்தாசன்
தமிழ்நாடு- இந்தியா

## *இந்த இனம் ...*

உதிரிப் பூவாய்ச் சிதறிக் கிடந்தும்
ஒற்றுமை தேடுதே .. !
விதியை நம்பி மதியை இழந்து
வெற்றியை நாடுதே.. !

பாதை மாறிப் பயணம் போட்டே
பரமனை நாடு தே .. !
போதை நிலையில் புத்தகம் படித்துப்
புரண்டுப் பாடுதே .. !

சடங்கு, சாத்திரம், சழக்கில் நெஞ்சை
சாய்த்தெழ முக்குதே.. !
மடமை, மூட வாரிசு ஆகி
வம்பில் கத்துதே .. !

இனமொழி உணர்வே இன்றி நடிகனை
ஏற்றிப் போற்றுதே .. !
தன்துயர் பண்போடு பிறர்பண் பின்மேல்
சவாரி போடுதே.. !

விடிய விடிய வீடியோ முன்னில்
வீழ்ந்து மயங்குதே.. !
விடிந்து பின்னர் விடியல் எங்கென
வேர்க்கப் பறக்குதே.. !

ஆரிய மாயை ஆதரித் தேதன்
அறிவை இழக்குதே.. !
நாறிய பழங்கதை நம்பி நடந்து
நடந்து தளறுதே .. !

இந்த இனத்தை எழுப்ப பெரியார்
எனும் முகம் வந்ததே.. !
அந்த முகத்தையும் மறந்தறி யாமைக்குள்
அகப்பட்டுத் தபிக்குதே.. !

ம.அ. சந்திரன்
தாசேக் குளுகோர்
மலேசியா



## இரு மெல்லிதழும் ஒரு மனதும் !

நித்தம் வீசும் தென்றலில்
எண்ணி முடிக்காத மனசலைகள்

நீயும் நானுமாய்
எழுதி முடித்த கடிதங்கள் எத்தனை
வியப்பிற்குள் ஓடி மறையும்
உள் மனசும் - ___
என் இடு கடிதங்களும் !

எவ்வளவு நாளாச்சு
இந்த “கா” எழுத்தை எழுதி !
அடியே ! இன்னுமொரு முறை
மனசைத் திற ....
மீண்டும் என் விரல்களால் கீற வேண்டும் !

ஒவ்வொரு சிமிட்டலிலும்
கண்கள் சிவந்துதான் போகின்றன !
உனக்கும் எனக்குமான கடிதங்களை
கிழித்தெறிந்த விரல்களை நோக்கும்போது !

ப. மயில்,
பகாவ்.
மலேசியா.

# அருவியின் உலகளாவிய பொறுப்பாளர்கள்

1. செர்மனி - திரு.சின்னையா மகேசுவரன்
OTTO BRENNER ALLEE 56
28325 BREMEN
GERMANY.

திரு.எழிலன்
VON –KETTLER- STRASSE 8
49497 METTINGEN
GERMANY

2. பிரான்சு - திரு.மே.துவகரன்
47/45
RUE 6 DU LIVETENANT THOMAS
93170 BAGNOLET,FRANCE.

3. மியான்மார் - திரு.வீரா.முனுசாமி
974 18th STREET
BLOCK NO.7
SOUTH OKKALAPA
YANGON,MYANMAR

4. டென்மார்க் - வேலணையூர் பொன்னன்னா
MOLLE VEJ 7J
7190 BILLUND
DENMARK

5. அந்தமான் - திரு.கரிகால் வளவன்
அந்தமான் முரசு
315 ABERDEEN BAZAR
PORT BLAIR 744 101
ANDAMAN.INDIA

6. இலண்டன் - திரு.இ.கே.இராஜகோபால்
(ஈழகேசரி)
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ

7. நோர்வே - திரு.என். எச். பிரபு
(சர்வதேச தமிழர்)
L. HERVIGS VN.9A
3035 DRAMMEN
NORWAY

## உதிர உறவு

மலரை விட முள்ளே-
நீ மேல்
உறவுக்கான.....
உதிர கசிவு புறப்படும்
உன்னைத் தொட்டவுடன்

## விட்டில் பூச்சிகள் !

சுடும் என்று தெரிந்தும்
காதலின் மீது
முட்டி மோதும் ஆண்கள்
என்றும் விளக்கொளியாய் "அவள்"
உயிர்க் கசிவில் "இவன் "

-அழகு பாருக் பாட்சா-
புருணை